அன்றைக்கு என்ன நடந்தது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அதற்குத்தான் தாங்கள் விளக்கம் அளித்தீர்கள். நான் சொல்வது, வருத்தம் சொல்லுங்கள் என்றாலும் அவர்கள் சொல்லப் போவதில்லை. அன்றைக்கு எப்படி மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொன்னதைப் போல, அது மாதிரி ஆகிவிடும் என்றால் .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இது ரொம்ப மென்மையானது. அது கடுமையானது. என்னுடைய அறையிலே வந்து சொல்லுங்கள் என்றுதான் இப்போது சொல்கிறோம். அதிலே, அன்றைக்கு பத்திரிகையிலே அறிக்கை வெளியிட வேண்டுமென்றே கோரி இருக்கிறார்கள்.

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மானியக் கோரிக்கைகள் மீது நாளைக்குக் காலையில் பேசத் தொடங்குகிறார். அதற்குப் பின்னர் பிரதான எதிர்க்கட்சியினர் கலந்து கொண்டு அவர்கள் கருத்துரைகள் வழங்க ஏற்கெனவே அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். அவர்கள் யாரேனும் வந்து பேசலாம். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு) நாளைக்கு என்ன நிகழ்ச்சி என்பதை உங்களுக்குச் சொன்னேன்

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8—4—1993) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2,03 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

148. 1991-92 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

149. 1991-92-ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப்பணிக் குழுவின் எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

150. 1991-92–ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை.. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

151. 1991–92–ஆம் ஆண்டிற்கான சேரன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

152. 1991–92 ஆம் ஆண்டிற்கான ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

117. கோரிக்கை எண். 44—காட்டுவளத் துறை குறித்த. கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94. (தமிழ், ஆங்கிலம்)

118. காட்டுவளத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1993–94 (ஆங்கிலம்).

119. கோரிக்கை எண். 24—பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94. (தமிழ், ஆங்கிலம்).

120. பெருநகரத் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

121. சர்க்கரைத் துறைப் பற்றிய செயல்முறைத் திட்டம், 1993–94. (தமிழ், ஆங்கிலம்).

122. பெருந் தொழில்கள் பற்றிய செயல் திட்ட ஆய்வுரை, 1992–93. (தமிழ், ஆங்கிலம்).

123. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறை திட்டம், 1993–94. (தமிழ், ஆங்கிலம்),